செ.வெ.எண்.164 நாள்.13.03.2018.

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பேருந்து நிலையத்தில் இலவச (வைபை) இணையதள சேவை வசதியினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பேருந்து நிலையத்தில் இலவச (வைபை) இணையதள சேவை வசதியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.03.2018) திறந்து வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தமிழகத்தில் முதன் முறையாக திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர் பேருந்து நிலையத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு இலவச (வைபை) இணையதள சேவை வசதியினை இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவையினை பயன்படுத்தி, மாணவ, மாணவிகள் தங்களுக்கு தேவையான இணையதள புத்தகங்கள் மற்றும் விவசாயப் பெருமக்கள் தங்களுக்கு தேவையான வேளாண்மை குறித்த தகவல்களை இணையதளம் மற்றும் வழிகாட்டுதல் மூலம் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த இணையதள வசதியானது சுமார் 300 மீட்டர் சுற்று பரப்பளவில் இணையதள சேவையினை பயன்படுத்த முடியும். 10 mbps வரை பயன்படுத்தும் அளவிற்கு இச்சேவை வேகமாக இயங்கும். ஒரே நேரத்தில் 500 நபர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளலாம். 24 மணி நேரத்திற்கு ஒரு நபர் 10 mbps வேகத்தில் 400 mbps உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மேலும், பேருந்து நிலையத்தில், இணையதள சேவையினை எவ்வாறு பயன்படுத்துவது என்று பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம், LED திரைகள் மூலம் செயல்முறைகள் திரையிட்டு காண்பிக்கப்படும். இச்சேவை பயன்பாட்டினை கருத்திற் கொண்டு, இனிவரும் காலங்களில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து பேருந்து நிலையங்களில் இலவச (வைபை) இணையதள சேவை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை, முக்கிய பிரமுகர்கள் திரு.அழகானந்தம், திரு.அந்தோணி அமலராஜா, திரு.தவசிமுத்து, வள்ளியூர் பேரூராட்சி அலுவலக கண்காணிப்பாளர் திரு.ராஜேஸ்வரன் மற்றும் முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி